# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-8** **தேதி:-28.06.2017**

**நமது நியாயமான போராட்டங்களுக்கு தடை விதிக்கும் நிர்வாகத்தைக் கண்டித்து நிர்வாகத்திற்கு கொடுத்து வந்த ஒத்துழைப்பை 01.07.2017 முதல் நிறுத்துவோம்! அனைத்து சங்கங்களின் அறைகூவல்**

அன்பார்ந்த தோழர்களே,

27.06.2017 அன்று அனைத்து சங்கங்களின் கூட்டம் SNEA பொது செயலாளர் தோழர் K.செபாஸ்டியான் தலைமையில் நடைபெற்றது. அதன் அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு கூட்டத்தின் நோக்கம் தொடர்பாக எடுத்துரைத்தார். அமைதியான போராட்டங்கள் உள்ளிட்ட தொழிலாளர்களின் அடிப்படையான உரிமைகளை தடுக்கும் BSNL நிர்வாகத்தின் அடக்குமுறையை அந்தக் கூட்டம் கடுமையாக கண்டித்தது. இந்த நிறுவனத்தின் புனரமைப்பிற்காக அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்கள் தனது முழுமையாக ஒத்துழைப்பை கொடுத்து வருகிறது. நிறுவனத்தின் நலனை கணக்கில் கொண்டு ஊழியர்களும் அதிகாரிகளும், தங்களின் வரையறுக்கப்பட்ட பணிகளுக்கு மேல் கூடுதலான பணிகளை செய்து வருகின்றனர். மறு புறத்தில் தொழிலாளர்களின் சட்ட பூர்வமான உரிமைகளான அமைதியான எதிர்ப்பு இயக்கங்களைக் கூட தடை செய்யும் வகையில் கார்ப்பரேட் நிர்வாகம் தொடர்ச்சியாக கடிதங்களுக்கு மேல் கடிதங்களை வெளியிட்டு வருகின்றது. இறுதியாக வந்த கடிதத்தில் தர்ணா போராட்டங்கள் கூட வேலை நிறுத்தமாக கணக்கில் கொள்ளப்படும் என்றும், அதற்கான ஊதிய வெட்டு அமலாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விரிவான விவாதங்களுக்கு பின் நிர்வாகத்திற்கு கொடுத்து வரும் அனைத்து ஒத்துழைப்புக்களையும் 01.07.2017 முதல் விலக்கிக் கொள்வது என அனைத்து சங்கங்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே 01.07.2017 முதல் நமது ஊழியர்களும், அதிகாரிகளும் தங்களின் பணி தவிர இதர பணிகளில் எதுவும் ஈடுபட வேண்டாம் என அனைத்து சங்கங்களின் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இந்த நிறுவனத்தை பாதுகாக்க ஒரு மணி நேர கூடுதல் பணி உட்பட அனைத்து விதமான முயற்சிகளையும் நமது அகில இந்திய சங்கங்கள் மேற்கொண்டு வரும் நேரத்தில், நமது நியாயமான ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக நாம் இயக்கம் நடத்தும் போது கார்ப்பரேட் நிர்வாகம் நமது போராட்ட இயக்கங்களை தடை செய்கிறது. நிர்வாகத்தின் இந்த ஜனநாயக விரோத போக்கினை அனுமதியோம் என்று நமது மத்திய சங்கங்கள் முடிவெடுத்துள்ளது. “இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம்’ என்பது போல BSNL நிர்வாகம் செயல்படும் என்றால் அதனை கண்டு வாளாயிருக்க நாம் அடிமைகள் அல்ல. இந்த நிறுவனத்தை பாதுகாக்க நாம் கொடுக்கும் ஒத்துழைப்பை நிர்வாகம் மதிக்கவில்லை என்பதால் நாம் நமது ஒத்துழைப்பை நிறுத்துவோம். நாம் நிர்வாகத்திற்கு கொடுத்துவந்த ஒத்துழைப்பை 01.07.2017 முதல் நிறுத்துவோம். நமது நியாயமான கோரிக்கையான போராட்டங்களை தடை செய்யும் உத்தரவை நிர்வாகம் திரும்ப பெறும் வரை நமது ஒத்துழைப்பை நிறுத்துவோம். நிர்வாகத்தை உணரச் செய்வோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**